
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 38 | 4 Pages | 7.9.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 38 | 4 பக்கங்கள் | 7.9.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத் துண்ணாமை நன்று**

**விளக்கம்:**
**நெய்முதலியப்பொருள்களைத்தீயில்சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலை விட ஒன்றன் உயிரைக்கொன்று உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது.**

# ட்ரில்லியண்ட் நிறுவனத்துடன் தமிழக அரசு ரூ.2000 கோடிக்கு ஒப்பந்தம்

சான்பிரான்சிஸ்கோ, செப். 7

வளர்ச்சியின் அடையாளமாக திகழும் தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்யும் வகையிலும், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்க நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

சான்பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன, இதன்மூலம் மொத்தம் ரூ.1,300 கோடி முதலீட்டில் 4,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 3ந் தேதியன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் ஈட்டன் மற்றும் அஷ்யூரன்ட் நிறுவனங்களுடன் முதலமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.




ஈட்டன் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசிற்கும் இடையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ரூ.200 கோடி முதலீட்டில் 500 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னையில் தற்போதுள்ளஈட்டன்நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை நிறுவுவதற்கானபுரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் அஷ்யூரன்ட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசிற்கும் இடையே, அஷ்யூரன்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ட்ரில்லியண்ட் நிறுவனத்துடன் ரூ.2,000 கோடிக்கு தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் தொழில் முதலீட்டு மையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதைத்தொடர்ந்து சென்னையில் உற்பத்தி ஆலைவிரிவாக்கம்குறித்து நைக் நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

## ராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேர் விடுதலை 3 பேருக்கு சிறை தண்டனை விதித்த இலங்கை கோர்ட்டு

கொழும்பு, செப். 7

ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர், கடந்த 27ந்தேதி கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் அவர்களை கைதுசெய்தனர். மேலும், அவர்களின் படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட 8 மீனவர்களின் வழக்கு இன்று இலங்கை மன்னார் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரித்த கோர்ட்டு, முதல் முறையாக எல்லை தாண்டி மீன் பிடித்த 5 பேரை விடுதலை செய்து உத்தரவிட்டுள்ளது. மேலும், 5 பேரும் இலங்கை மதிப்பில் தலா ரூ.50 ஆயிரம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

எஞ்சியுள்ள 3 பேர் 2வது முறையாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் வழக்குப்பதிவு செய்யப்பட்டதால், அவர்களுக்கு 6 மாதங்கள் சிறை தண்டனையும், இலங்கை மதிப்பில் தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்தும் இலங்கை கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

## ஹசீனா அமைதியாக இருப்பது நல்லது : இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ்



டாக்கா, செப். 7

வங்காளதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையில் அவாமி லீக் கட்சியின் ஆட்சி நடந்து வந்தது. இந்நிலையில், அரசு வேலைகளில் இடஒதுக்கீடு விவகாரம் வன்முறையாக வெடித்தது. இதற்கு எதிராக கடந்த ஜூலையில் தொடங்கிய மக்கள் போராட்டம் பல வாரங்களாக தொடர்ந்து நீடித்தது.

இந்த சூழலில், பிரதமர் பதவியை ராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதனால் ஆட்சியை கைப்பற்றிய ராணுவம், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசை அமைத்தது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து அரசியல் கருத்துகளை சேக் ஹசீனா கூறுவது நட்புறவை பாதிக்கும் செயல் என்று வங்காளதேச இடைக்கால அரசின் தலைவர் முகமது யூனுஸ் கூறியுள்ளார். இதுதொடர்பாக யூனுஸ், டாக்காவில் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:


வங்காளதேசம் இந்தியாவுடன் வலுவான உறவுகளை மதிக்கிறது. ஹசீனாவின் நிலைப்பாட்டில் யாரும் திருப்தி இல்லை, ஏனென்றால் அவர் பேசுவது பிரச்சனையாக இருக்கிறது. அவர் அமைதியாக இருந்திருந்தால், நாங்கள் மறந்திருப்போம்; மக்களும் மறந்து இருப்பார்கள். ஆனால் அவர் இந்தியாவில் அமர்ந்து கொண்டு பேசுகிறார், இது யாருக்கும் பிடிக்கவில்லை.

இது எங்களுக்கும் இந்தியாவுக்கும் நல்லதல்ல. இது அசவுகரியமாக உள்ளது. மக்கள் எழுச்சி மற்றும் மக்களின் கோபத்தைத் தொடர்ந்து அவர் தப்பி ஓடிவிட்டார். அட்டூழியங்களுக்கு எதிராக வங்காளதேச மக்களுக்கு நீதியை உறுதிப்படுத்த இடைக்கால அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும், அதற்காக அவர் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்.

அவரை திரும்ப அழைத்து வர வேண்டும், இல்லையெனில் வங்காளதேச மக்கள் நிம்மதியாக இருக்க மாட்டார்கள். அவர் செய்த அட்டூழியங்கள், இங்குள்ள அனைவர் முன்னிலையிலும் விசாரிக்கப்பட வேண்டும். இந்தியாவுடன் நல்லுறவுவையே வங்காளதேசம் விரும்புகிறது. ஆனால் ஹசீனாவின் தலைமை மட்டுமே நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகிறது என்ற கதையை இந்தியா கைவிட வேண்டும் . வங்காளதேசம் மற்ற தேசங்களைப் போலவே மற்றொரு அண்டை நாடு. இந்தியவங்காள உறவுகளை மேம்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும் .

இவ்வாறு அவர் கூறினார்.

## பப்புவா நியூ கினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



ஹாங்காங், செப். 7

பப்புவா நியூ கினியாவில் உள்ளஅங்கோரம்பகுதியில் இருந்து வடக்கு வடகிழக்கே 66 கி.மீ. தொலைவில்இன்றுகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 6.33 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம்ரிக்டர்அளவில் 6.2 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

10.0 கிமீ ஆழம் கொண்ட இந்த நிலநடுக்கம், 3.49 டிகிரி தெற்கு அட்சரேகை மற்றும் 144.25 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையில் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் பப்புவா நியூ கினியாவில் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. ஆனால் பொருளிழப்புகள் உள்ளிட்ட பிற பாதிப்புகள் பற்றிய உறுதியான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

முன்னதாக இந்த மாத தொடக்கத்தில், பப்புவா நியூ கினியாவின் பங்குனாவில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. நிலநடுக்கத்திற்கான தாக்கம் அதிகம் ஏற்பட கூடிய பகுதியில் பப்புவா நியூ கினியா உள்ளது. தென்கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் பெருங்கடலோர பகுதிக்கு உட்பட்ட நிலநடுக்கம் அதிகம் ஏற்பட கூடிய இடத்தில் அது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வயிற்றெரிச்சல் பிடித்தவர்கள் தமிழக கல்வி முறையை குறை சொல்கின்றனர்: உதயநிதி ஸ்டாலின்

சென்னை, செப். 7

சென்னை மறைமலை நகரில் நடைபெற்ற திமுக நிர்வாகி திருமண விழாவில் திமுக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:

★ இந்தியாவிலேயே சிறந்த கல்வி முறை ஒன்று இருக்கிறது என்றால் அது தமிழ்நாட்டில் தான்.

★ தமிழக பாடத்திட்டத்தில் படித்தவர்கள் இன்று பல்வேறு தளங்களில் உயர்ந்த நிலையில் உள்ளனர். தமிழக பாடத்திட்டத்தில் படித்தவர்கள்விஞ்ஞானிகளாகவும், மிகப்பெரிய மருத்துவராகவும் உள்ளனர்.

★ சில வயிற்றெரிச்சல் பிடித்தவர்கள் இதை ஏற்க முடியாமல் தான் மாநில அரசின் கொள்கை மீது குற்றம் சொல்கிறார்கள்.

★ ஆசிரியர் பணி அறிவார்ந்த தலைமுறையை உருவாக்கும் பணி.

★ தமிழக பாடத்திட்டத்தை யார் குறை சொன்னாலும் ஏற்க முடியாது.

★ தமிழ்நாடு பாடத்திட்ட முறையை குறை கூறினால் தமிழக ஆசிரியர்கள், மாணவர்களை அவமதிப்பதற்கு ஒப்பாகும்.



★ மாணவர்களை சுயமாக சிந்தித்து செயல்பட தூண்டுவதுதான் சிறந்த கல்வி முறை.

★தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தில் பயில்பவர்கள் தான், வருங்காலத்திலும் சிறந்து விளங்குவார்கள் என உறுதி அளிக்கிறேன் என்று கூறினார்.

தமிழக கல்வி முறையின் தரம் மோசம் என கவர்னர் ஆர்.என்.ரவி பேசியிருந்த நிலையில் தற்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்துள்ளார்.

## மதுரை மாவட்டம் அரசு ராஜாஜி மருத்துவமனைக்குள் நடக்கும் அராஜகம்

### அரசு மருத்துவமனையில் தனியார் நிறுவனங்களால் பாதிக்கப்படும் ஏழை மக்களின் அவல நிலை

மதுரை, செப். 7

தென் தமிழகத்தில் பெயர் பெற்ற அரசு ராஜாஜி மருத்துவமனையில் பொருளாதாரத்தில் கஷ்டபடும் ஏழை எளிய மக்களே பெரும்பாலும் இந்த மருத்துவ மருத்துவமனைக்கு வருகிறார்கள்.. மதுரை அரசு மருத்துவமனையை நம்பி பிரசவத்திற்காக சிரமப்பட்டு வரும் நேரத்திலும், இங்கு பிரசவத்திற்கு வரும் ஏழை தாய்மார்களிடம் டாவடித்தனமாக கிரிஸ்டல் என்ற நிறுவனம் நடந்து கொள்கிறது..




அரசு மருத்துவமனையில் குத்தகைக்கு எடுத்துள்ள கிரிஸ்டல் நிறுவனத்தில் பணிபுரியும் பெண்கள் மற்றும் சூப்பர்வைசர்கள் மிகப்பெரிய கையூட்டு நடைபெறுகிறது. இங்கு நாங்கள் வேலை செய்ய வேண்டும் என்றால் எங்களுக்கு பணம் கொடுத்தாக வேண்டும் என்று கரா ராக கூறுகிறார்கள் எங்களுக்கு 50 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை ஒரு நபருக்கு கண்டிப்பாக கொடுத்தே ஆகவேண்டும் என்று கரா ராக கூறி வசூல் செய்து வருகின்றனர். இது மருத்துவமனைக்கும் தெரியும் என்று அவர்களே கூறுகிறார்கள். இந்த நிறுவனத்தின் மீது மருத்து வமனையின் கீழ் குத்தகைக்கு எடுத்து வரும் கிறிஸ்டல் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்குமா..??

ஏழை தாய்மார்கள் மற்றும் பெரியவர்கள், அனைவரும் புலம்பி தவிக்கின்றனர். நாங்கள் பணம் இருந்தால் மற்ற தனியார் மருத்துவமனை சென்று பார்ப்போம். அதைவிட இங்கு கூடுதல் கட்டணம் கிறிஸ்டல் நிறுவனத்தின் வேலை செய்யும் பணி ஆட்கள் வசூல் செய்கின்றனர். இதை யாரிடம் தெரிவிப்பது என்று கலக்கமாக இருக்கிறது என்று வேதனையுடன் ஏழை தாய்மார்கள் கூறுகின்றனர். இதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று சமூக ஆர்வலர்களின் கேள்வியாக உள்ளது..




செஞ்சி ஒன்றியம் கவரை கிராமத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் இறுதி நாளான என்று தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ்த்தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக விசாரித்து தீர்வு காண வேண்டும் என்று உத்தரவிட்டார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் தமிழரசன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், துணை தலைவர் ஜெயபாலன், வட்டாட்சியர் ஏழுமலை. மற்றும் துறை சார்ந்த ஊழியர்கள்மற்றும் கவரை ஊராட்சி மன்ற தலைவர் அய்யனார் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் 2024, 2025.ஆம் கல்வியாண்டில் கவரை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.107800 மதிப்பீட்டில் இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தினை சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ்த்தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாணவ மாணவியர்களுக்கு அறிவுரை கூறி மிதிவண்டியை வழங்கினார் உடன் தலைமை ஆசிரியர் அரசு, மற்றும் இருபால் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்

# விநாயகர் சதுர்த்தி நாளை ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி மின்சார ரெயில்கள் இயக்கம்

சென்னை, செப். 7

தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, நாளை (7ந்தேதி) பொது விடுமுறை என்பதால் மின்சார ரெயில்கள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணைப்படி இயக்கப்படும்.

அதன்படி சென்னை சென்டிரல் அரக்கோணம், சென்னை சென்டிரல் கும்மிடிப்பூண்டி, சென்னை சென்டிரல் சூலூர்பேட்டை மற்றும் சென்னை கடற்கரை செங்கல்பட்டு இடையேயான மின்சார ரெயில்கள் ஞாயிற்றுக்கிழமை அட்டவணையின் படி இயக்கப்படும்.



இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# 10 நாட்களாக இருளில் மூழ்கியுள்ள கிராமம் குடிநீர் இன்றி, தூக்கம் தொலைத்து நிற்பதாக மக்கள் வேதனை

சிவகங்கை, செப். 7

சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. இதனால், திருப்புவனம் அருகே உள்ள தட்டான் குளம் கிராமத்தில் மின்சாரம் இன்றி பொதுமக்கள் 10 நாட்களாக இருளில் மூழ்கியுள்ளனர்.

பலத்த காற்று மழையால் ஆல மர கிளை விழுந்து மின் வயர்கள் அறுந்து விழுந்ததால் 2 மின்கம்பங்கள் சேதம் அடைந்தது. முறிந்து விழுந்த மரக்கிளைகளை அகற்றும் செலவை யார் ஏற்பது? என மின்துறை, வருவாய்த்துறை, ஊராட்சி நிர்வாகம் இடையே ஏற்பட்ட குழப்பத்தால் சீர் முடியாத நிலையில் உள்ளது. இதனால், 10 நாட்களாக மின்சாரம் இல்லாததால் குடிநீர் இன்றி, தூக்கம் தொலைத்து நிற்பதாக கிராம மக்கள் வேதனை தெரிவித்தனர். மேலும், மின் மோட்டார்களை இயக்க முடியாததால் நெல் வயல்கள், தென்னந்தோப்புகள் தண்ணீர் இன்றி காய்வதாக விவசாயிகளும் வேதனையுடன் தெரிவித்தனர்.

# ஜாபர் சாதிக்கின் ரூ.55 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கம் அமலாக்கத்துறை நடவடிக்கை

சென்னை, செப். 7

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு உணவு பொருட்கள் என்ற பெயரில் 'சூடோ பெட்ரைன்' என்ற போதைப்பொருளை கடத்திய வழக்கில் தமிழ் சினிமா தயாரிப்பாளர் ஜாபர் சாதிக்கை மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கடந்த மார்ச் மாதம் கைது செய்தனர். விசாரணையில் அவர், போதைப்பொருள் கடத்தல் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் பல கோடி ரூபாய் பணத்தை ஈட்டியதும், சட்டவிரோத பண பரிமாற்றத்தில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து இந்த வழக்கு விசாரணையில் அமலாக்கத்துறை அதிகாரிகளும் இறங்கினார்கள். டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜாபர் சாதிக்கை காவலில் எடுத்து அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள்.

இதற்கிடையே ஜாபர் சாதிக் உள்பட இந்த வழக்கில் கைதான நபர்கள் மீது டெல்லி சிறப்பு கோர்ட்டில் மத்திய போதைப் பொருள் போலீசார் கடந்த ஏப்ரல் மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். மேலும் சட்டவிரோத பண பரிமாற்ற வழக்கில் ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது ஆலீம் மீதும் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மத்திய போதைப்பொருள் தடுப்பு போலீசாரும், அமலாக்கத்துறை அதிகாரிகளும் கைக்கோர்த்து இந்த வழக்கில் தொடர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்த நிலையில் ஜாபர் சாதிக்கிற்கு சொந்தமான ரூ.55.30 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத்துறை முடக்கி உள்ளது. இதுதொடர்பாக அமலாக்கத்துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஜாபர் சாதிக், சட்டவிரோத பண பரிமாற்றத்தின் மூலம் ஈட்டிய பணத்தை திரைப்பட தயாரிப்பு, ஓட்டல்கள், சரக்கு நிறுவனம் போன்ற தொழில்களில் முதலீடு செய்திருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எனவே அவருடைய பெயரில் இருந்த அசையும், அசையா சொத்துகள், மனைவி அமீனா பானு மற்றும் பினாமிகள் மைதீன் கானி, முகமது முஸ்தபா, ஜாமல் முகமது ஆகியோரின் பெயரில் இருந்த சொத்துகள் முடக்கப்பட்டுள்ளது.

ஜே.எஸ்.எம். சொகுசு ஓட்டல் (புரசைவாக்கம்), ஆடம்பர பங்களா வீடு உள்பட 14 அசையா சொத்துகள், 7 சொகுசு கார்கள் உள்பட மொத்தம் ரூ.55.30 கோடி சொத்துகள் முடக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

ஒகேனக்கல், செப். 7

ஒகேனக்கலுக்கு நீர்வரத்து வினாடிக்கு 20ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. அருவியில் குளிப்பதற்கான தடை தொடர்ந்து 5வது நாளாக நீடிக்கிறது.

கர்நாடக மற்றும் கேரளா காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி கிருஷ்ணராஜ சாகர் அணைகள் முழுமையாக நிரம்பின. இதன் காரணமாக இரு அணைகளில் இருந்து 20 ஆயிரத்து 319 கன அடி உபரி நீர் தமிழகத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.



இந்த நிலையில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவு காரணமாக நேற்று ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து நேற்று வினாடிக்கு 17 ஆயிரம் கனஅடியாக வந்தது.

இன்று காலை ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்து வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக உயர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

நீர்வரத்து அதிகரித்ததால் மெயின் அருவி, சினி பால்ஸ், ஐந்தருவி ஆகிய அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. இதேபோன்று காவிரி ஆற்றிலும் தண்ணீர் சீறி பாய்ந்து சென்றது.

இந்த நீர்வரத்தை கர்நாடகா தமிழக எல்லையான பிலிகுண்டுலு வில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பதும் குறைவதுமாக உள்ளதால் அருவியில் குளிக்க விதிக்கப்பட்ட தடையாக தொடர்ந்து 5வது நாளாக நீடிக்கிறது.

# அரசு விரைவு பஸ்களுக்கு தீபாவளி முன்பதிவு தொடங்கியது

சென்னை, செப். 7

அரசு விரைவு பஸ்களுக்கு 60 நாட்களுக்கு முன்னதாக முன்பதிவு செய்யும் நடைமுறை உள்ளது. அரசு பஸ்களில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நீண்ட தூரம் செல்லக்கூடிய எஸ்.இ.டி.சி. பஸ்களில் படுக்கை வசதியுடன் குளிர்சாதன வசதி போன்றவை இருப்பதால் அதிகளவில் பயணிக்க தொடங்கி உள்ளனர்.

இந்த நிலையில் தீபாவளி பண்டிகை அக்டோபர் 31ந் தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது.




தீபாவளிக்கு சொந்த ஊர் செல்லக் கூடியவர்கள் கடந்த 1, 2ந் தேதிகளில் முன்பதிவு செய்தனர். அக்டோபர் 28, 29 ஆகிய தேதிகளில் பயணம் செய்வதற்காக முன்பதிவு தொடங்கியது. தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய அனைத்து பஸ்களும் நிரம்பி விட்டன.

அதே போல பண்டிகை முடிந்து நவம்பர் 3ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அங்கிருந்து புறப்பட்டு சென்னைக்கு வருவதற்கும் பெரும்பாலான இடங்கள் நிரம்பி விட்டன. 1500 பஸ்களுக்கு முதல் கட்டமாக முன்பதிவு நடந்து வருகிறது. இது தவிர வழக்கம் போல சிறப்பு பஸ்களும் அறிவிக்கப்படும்.

# மருத்துவ காலி பணியிடங்கள் எடப்பாடி பழனிசாமிக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்

சென்னை, செப். 7

மருத்துவ காலி பணியிடங்கள் குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: ★ ஒரு துறையில் என்ன இருக்கிறது என்பதை தெரிந்துகொண்டு இபிஎஸ் பேச வேண்டும். ★ போராடிய மருத்துவர்களுக்கு தண்டனையாக பணியிட மாற்றம் செய்தது அதிமுக அரசு. ★ ஒப்பந்த பணியாளர்களின் பிரச்சனைகளுக்கு கூட தீர்வு காணப்பட்டுள்ளது. ★ திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 1947 உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ★ 3 ஆண்டுகளில் 6700க்கும் மேற்பட்ட மருத்துவ காலி பணியிடங்கள் நிரப்பட்டுள்ளன. ★ 3 ஆண்டுகளில் 36 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு பணியிட மாறுதல் கிடைத்துள்ளது என்று கூறினார்.

# நாட்டுத்தொண்டும் மொழித்தொண்டும் இரு கண்கள் என வாழ்ந்திட்ட பெருமகனார் வ.உ.சி. மு.க.ஸ்டாலின்

சென்னை:, செப். 7

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில்,

ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராகக் கப்பலோட்டி, சிறையில் வாடிய 'கப்பலோட்டிய தமிழர்' வ.உ.சிதம்பரனார் அவர்களது புகழ் வாழ்க!



நாட்டுத் தொண்டும் மொழித் தொண்டும் தனது இரு கண்கள் என வாழ்ந்திட்ட அந்தப் பெருமகனாரின் தியாக வாழ்வை, இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து அவரது பெருமையைப் போற்றுவோம்! என்று தெரிவித்துள்ளார்.

# கல்பாக்கம் அணுமின் நிலையம் சார்பில் 1.48 கோடி செலவில் பள்ளிக்கு புதிய கட்டிடம்

மாமல்லபுரம், செப். 7

கல்பாக்கம் அடுத்த வெங்கம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு, அணுமின் நிலையம் சார்பில் அதன் சுற்றுப்புற மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1கோடியே 48 லட்சம் மதிப்பில் 6 வகுப்பறைகள் கொண்ட இரண்டு மாடி கட்டிடம் கட்டி கொடுக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா வெங்கம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வேண்டாமிர்தம் ஏழுமலை தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக இந்திய அணுமின் கழக தொழில்நுட்ப இயக்குனர் ராஜேஷ், சென்னை அணுமின் நிலைய இயக்குனர் சேஷையா, ஆகியோர் பங்கேற்று, வகுப்பறையை திறந்து வைத்து மாணவ, மாணவியரின் பயன்பாட்டிற்கு ஒப்படைத்தனர்.




நிகழ்ச்சியில் அணுமின் நிலைய அதிகாரிகள், பள்ளி தலைமை ஆசிரியர் பவானி, ஆசிரியர்கள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தமிழகத்தில் மேலும் 3 புதிய சுங்கச்சாவடிகள்

விழுப்புரம், செப். 7

தமிழகத்தில் மேலும் 3 சுங்கச்சாவடிகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமைக்க உள்ளது.

விழுப்புரம் மாவட்டம் நங்கிளி கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம் கரியமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் நாகம்பட்டி ஆகிய 3 இடங்களில் சுங்கச்சாவடி அமைக்கப்பட உள்ளது.




நங்கிளி கொண்டான் சுங்கச்சாவடியில் ஒரு முறை சென்று வருவதற்கான கட்டணம் ரூ.60 முதல் ரூ.400 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் திரும்பி வருவதற்கான கட்டணம் ரூ.95 முதல் ரூ.600 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கரியமங்கலம் சுங்கச்சாவடியில் ஒரு முறை சென்று வர ரூ.55 முதல் ரூ.370 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் திரும்பி வர ரூ.85 முதல் ரூ.555 வரை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# விநாயகர் சதுர்த்தி, முகூர்த்த நாள் அரசு பஸ்களில் பயணம் செய்ய 70 ஆயிரம் பேர் முன்பதிவு

சென்னை, செப். 7

சுபமுகூர்த்தம், விநாயகர் சதுர்த்தி, ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறை நாட்களையொட்டி வெளியூர் பயணம் அதிகரித்துள்ளதால் சென்னையில் இருந்து பல்வேறு நகரங்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

இதேபோல பிற பகுதிகளில் இருந்தும் தமிழகம் முழுவதும் கூடுதலாக பஸ்களை இயக்க அரசு போக்குவரத்து கழகங்கள் திட்டமிட்டுள்ளனர்.

கோயம்பேடு, கிளாம்பாக்கம் பஸ் நிலையங்களில் இன்று முதல் 3 நாட்கள் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. 8ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) பல்வேறு நகரங்களில் இருந்து சென்னைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.




அரசு பஸ்களில் மட்டுமின்றி ஆம்னி பஸ்களிலும் இடங்கள் நிரம்பி வருகிறது. மேலும் சென்னையில் இருந்து செல்லக்கூடிய எல்லா ரெயில்களிலும் அனைத்து வகுப்புகளும் நிரம்பி விட்டன. குறிப்பாக தென் மாவட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய ரெயில்களில் இடங்கள் இல்லை.

புதிதாக விடப்பட்ட வந்தே பாரத் ரெயில்களிலும் எல்லா இடங்களும் நிரம்பி விட்டன. ஞாயிற்றுக்கிழமை வரை பஸ், ரெயில்கள் எல்லாம் நிரம்பி விட்டதால் அரசு பஸ்களில் இன்று பயணம் செய்ய காலை நிலவரப்படி 18 ஆயிரம் பேர் முன்பதிவு செய்து இருந்தனர்.

தமிழகத்தின் பல இடங்களில் இருந்து ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்ய 25 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்.

இதில் சென்னைக்கு வருவதற்கு மட்டும் 22 ஆயிரம் பேர் அரசு பஸ்களில் பயணத்தை உறுதி செய்துள்ளனர். சென்னையில் இருந்து மட்டும் 10 ஆயிரம் பேர் முன்பதிவு செய்தனர்.

பல்வேறு நகரங்களில் இருந்து 27 ஆயிரம் பேரும், சென்னையில் இருந்து 15 ஆயிரம் பேரும் செல்ல திட்டமிட்டு ள்ளனர். இதுகுறித்து அரசு விரைவு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறும்போது, பண்டிகை மற்றும் வார விடுமுறை நாட்களையொட்டி பொதுமக்களின் பயணம் அதிகரித்து உள்ளது.

கூட்டத்தை சமாளிக்க தேவைக்கேற்ப கூடுதலாக சிறப்பு பஸ்களை ஏற்பாடு செய்து உள்ளோம். முன்பதிவு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கூட்ட நெரிசலை தவிர்க்க முன்பதிவு செய்து பயணத்தை தொடர கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

# 2 ரெயில் நிலையங்களில் இதய நோயாளிகளுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் நவீன கருவி

சென்னை, செப். 7

சென்னையில் சுமார் 1 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் நிலையில் ரெயில் போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நகரின் முக்கிய ரெயில் நிலையங்களான சென்டிரல் மற்றும் எழும்பூர் ரெயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக ரெயில்வே நிர்வாகம் சார்பில் பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், ரெயில்வே நிர்வாகம் சென்னையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியுடன் இணைந்து, சென்டிரல் மற்றும் எழும்பூர் ரெயில் நிலையங்களில் இதய பிரச்சனைக்கு முதலுதவி சிகிச்சை செய்வதற்கான நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.







குறிப்பாக, சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நடைமேடை 4ல் உள்ள நிலைய கண்காணிப்பு அதிகாரி அலுவலகம் உள்ளிட்ட 6 இடங்களில் இந்த கருவிகள் பொறுத்தப்பட்டுள்ளது.

இதேபோல, சென்டிரல் ரெயில் நிலையத்தில் 7 இடங்களில் இந்த கருவி பொருத்தப்பட்டுள்ளது.

தானியங்கி வெளிப்புற டிபி பிரிலேட்டர் (ஏ.இ.டி.) என்று அழைக்கப்படும் இந்த கருவி, ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிக்கு திடீரென இதய துடிப்பு அதிகரித்து மாரடைப்பு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டால் அவரின் இதய துடிப்பை சரி செய்து, அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்கு முன்னதாக அளிக்கப்பட வேண்டிய முதலுதவி சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே அதிகாரி ஒருவர் கூறும்போது, 'இந்த கருவியை முதல்கட்டமாக சென்டிரல் மற்றும் எழும்பூர் ரெயில் நிலையங்களில் வைத்துள்ளோம்.

இதை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதற்காக ரெயில்வே ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கருவி விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்' என்றார்.

# சிவகங்கையில் ஐம்பொன் சிலை திருடிய பெண் கைது

சிவகங்கை, செப். 7

பீசர்பட்டினம் அகோரி மடத்தில் ஐம்பொன் சிலைகளை திருடிய மகேஸ்வரி என்பவர் கைது செய்யப்பட்டார். திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய கஸ்தூரி என்பவரை போலீசார் தேடி வருகின்றனர். மடத்தில் பணிப்புரிந்து கொண்டிருந்த இருவரும் சாமியாருக்கு தெரியாமல் பொருட்களை திருடியுள்ளனர்.

# 2024 - 2025 ஆம் கல்வியாண்டிற்கான சித்தா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை அறிவிப்பு

சென்னை, செப். 7

தமிழ்நாட்டிலுள்ளஅரசு மருத்துவ கல்லூரிகளில் உள்ள எம்.டி. (சித்தா) மற்றும் எம்.டி. (யுனானி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புகளுக்கும், சுயநிதி ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள எம்.டி. (ஓமியோபதி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புக்கு அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் அனைத்திற்கும், 2024 2025 ஆம் கல்வியாண்டிற்கான சேர்க்கை பெற அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தகுதியான நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

★ விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை "www.tnhealth.tn.gov.in <http://www.tnhealth.tn.gov.in>" என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக தனித்தனியாக ஒவ்வொரு முதுநிலை பட்டப் படிப்பு/பிரிவிற்கும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

★ விண்ணப்பங்கள் இவ்வியக்குநரகத்திலோ, தேர்வுக்குழுஅலுவலகத்திலோ வழங்கப்படமாட்டாது. மேலும், அடிப்படைத்தகுதி, தரவரிசை, கலந்தாய்வு அட்டவணை மற்றும் பிற விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in <http://www.tnhealth.tn.gov.in>" என்ற வலைதள முகவரியில் தெரிந்துக்கொள்ளலாம்.

★ விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை 08.09.2024 முதல் 20.09.2024 முடிய மாலை 05.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

★ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ அல்லதுநேரில்சமர்ப்பிக்கவோ கடைசி நாள்: 20.09.2024 மாலை 05.30 மணி வரை.

★ விண்ணப்பதாரர்கள் எம்.டி. (ஓமியோபதி) மருத்துவ முதுநிலை பட்டப் படிப்புக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்கள், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

★ விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கவேண்டிய முகவரி: "செயலர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை – 600 106.

★ தேசியத் தேர்வு முகமையால் நடத்தப்பெறும் முதுநிலை மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு AIAPGET 2024ல்பெற்றமதிப்பெண்களின் {எம்.டி. (சித்தா) AIAPGET (Siddha) – 2024, எம்.டி. (யுனானி)AIAPGET (Unani) – 2024, மற்றும் எம்.டி. (ஓமியோபதி) AIAPGET (Homoeopahty) – 2024} அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.

★ விண்ணப்பதார ர்களுக்கு கலந்தாய்வு நேர்முகமாக மட்டுமே நடைபெறும் மேலும் விண்ணப்பதாரர்கள் தங்கள்சொந்த செலவிலேயே வரவேண்டும்.

★ கலந்தாய்வு தேதி, இடம் மற்றும் அனைத்து விவரங்களும் வலைதள முகவரி மூலமாக மட்டுமே அறிவிக்கப்படும்.

★ கலந்தாய்வு அன்று நேரில் வரத்தவறியவர்கள் தங்களது வாய்ப்பை இழந்துவிடுவார்கள்.

★ விண்ணப்பக் கட்டணம்:

பட்டப்படிப்பு இருக்கைOC, BC, BCM, MBC / DNC பிரிவினர்களுக்கு (ரூபாயில்) SC, SCA & ST பிரிவினர்களுக்கு (ரூபாயில்)

எம்.டி. (சித்தா) அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 3,000/ இல்லை

எம்.டி. (யுனானி) அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 3,000/ இல்லை

எம்.டி. (ஓமியோபதி) அரசு ஒதுக்கீட்டு இடங்கள் 3,000/ இல்லை

அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் 1,000/ 1,000/

நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் 5,000/ 5,000/

★ விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை எஸ்.பி.ஐ. (SBI) e collect வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.

★ கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், தபால் / கூரியர் சேவையினால் ஏற்படும் காலதாமதத்திற்கு தேர்வுக் குழு பொறுப்பாகாது.

# கரூர் மாவட்டம் நொய்யல் ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திலிருந்து நீர் திறக்க உத்தரவு

கரூர், செப். 7

கரூர்மாவட்டம்,புகளூர் வட்டம், நொய்யல் ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கத்திலிருந்து, நொய்யல் கால்வாய்க்குட்பட்ட பாசன நிலங்களுக்கு 09.09.2024 முதல் 07.12.2024 வரையிலான 90 நாட்களில் முறை வைத்து 48 நாட்களுக்கு சிறப்பு நனைப்பிற்கு (Special Wetting) மொத்தம் 414.720 மில்லியன் கன அடிக்குமிகாமல்,தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், கரூர் மாவட்டம், புகளூர் மற்றும் மண்மங்கலம் ஆகிய வட்டங்களிலுள்ள 19480 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேரன்குளம் அமுதா வழக்கு; புதிய விசாரணை அதிகாரி நியமிக்கப்படுவார் ஐகோர்ட்டில் காவல்துறை தகவல்

சென்னை, செப். 7





ஆள்மாறாட்டம் செய்து நில அபகரிப்பு செய்ததாக சேரன்குளம் ஊராட்சி அதிமுக முன்னாள் தலைவி அமுதாவுக்கு எதிரான வழக்கில் புதிய விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு கூடுதல் விசாரணை நடத்தப்படும் என ஐகோர்ட்டில் காவல் துறை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது .

புகாரை சிபிசிஐடி முறையாக விசாரிக்கவில்லை என சிபிஐக்கு மாற்றக் கோரி ரோஸ்லின்என்பவர்மனுதாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் அமுதா மற்றும் அவரது கணவருக்கு ஆதரவாக செயல்படுவதாக சிபிசிஐடிக்கு எதிராக ஏற்கனவே புகார் அளித்திருந்தோம் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி புதிய விசாரணை அதிகாரி யார்? என்பது குறித்து டிஜிபியுடன் கலந்து ஆலோசித்து தெரிவிக்க வேண்டும் என ஐகோர்ட் நீதிபதி உத்தரவிட்டார்.

# 17 வயது சிறுவனை கடத்தி காதல் திருமணம் செய்த இளம்பெண்

வேலூர், செப். 7

வேலூர்மாவட்டம் பேரணாம்பட்டு பகுதியை சேர்ந்த 21 வயது இளம்பெண் அதே பகுதியில் உள்ள ஒரு ஷூ கம்பெனியில் பணியாற்றினார். இவருக்கும் அதே கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவனுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. நாளடைவில் இது காதலாக மாறியது. இருவரும் ஒரு வருடமாக காதலித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்த இளம்பெண் சிறுவனை கடத்திச்சென்று யாருக்கும் தெரியாமல் கோவிலில் திருமணம் செய்து கொண்டு வெளியூருக்கு சென்றதாக கூறப்படுகிறது. இந்த விஷயம் குறித்து அந்த பகுதியில் உள்ளவர்களுக்கு தெரியவரவே இந்த திருமணம் குறித்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு இலவச உதவி எண் மூலம் தொடர்பு கொண்டு புகார் அளித்தனர்.

புகாரின்பேரில் பேரணாம்பட்டு சமூக நலத் துறை விரிவு அலுவலர் மற்றும்குடியாத்தம்போலீசார் சிறுவனை திருமணம் செய்து கொண்ட இளம் பெண் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 17ந்தேதி மீலாது நபி விழா தலைமை காஜி அறிவிப்பு

சென்னை, செப். 7

இறை தூதர் முகமது நபிகள் பிறந்த தினத்தை, மீலாது நபி விழாவாக மகிழ்ச்சியுடன் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் இஸ்லாமிய மாதமான ரபியுல் அவ்வல் மாத பிறை தென்படவில்லை.

இந்த நிலையில், ரபியுல் அவ்வல் மாதம் நாளை (வெள்ளிக்கிழமை) தொடங்கும். இதனால், நபிகள் நாயகம் பிறந்த நாளான மீலாது நபி விழா, வருகிற 17 ந்தேதி (செவ்வாய்கிழமை) கொண்டாடப்படும்என்றுதமிழகஅரசின் தலைமை காஜி முகம் மது சலாகுதீன் அய்யூப் அறிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர், காட்டாங்குளத்தூர் பகுதிகளில் வட மாநிலத்தவர் தயாரித்து வரும் விநாயகர் சிலைகளில் ரசாயனம் கலந்து விற்பனை செய்வதால், செங்கல்பட்டு வட்டாட்சியர் பூங்குழலி தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டு 200 சிலைகளை பறிமுதல் செய்தனர்.

# மின்மினி நடத்தும் ”கோட்' போட்டி: 'மின்மினி' செயலி நடத்தும் 'கோட்' போட்டி

சென்னை, செப். 7

ஆசிரியர் தினத்தையொட்டி, மின்மினி செயலி சார்பில் கோட் கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்ஸ் என்ற போட்டியை நடத்துகிறது.

பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் 'கோட்' என மிகவும் மதித்த, உங்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய ஆசிரியர்களை நினைவுகூரும் வகையில் அவர்களுக்கு உங்கள் நன்றியை தெரிவிக்கும் விதத்தில் ஒரு நிமிட வீடியோவை பதிவு செய்து அதை மின்மினி செயலியில் ஆங்கிலத்தில் 'ஹேஷ்டாக் கோட்' என்பதை சேர்த்து பதிவிடலாம். தேர்தெடுக்கப்படும் சிறப்பான பதிவுகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.இதுகுறித்து மின்மினி செயலியின் செயல் துணைத்தலைவர் ஸ்ரீராம் கூறியதாவது:

பயனாளர்கள் மின்மினி செயலியை கூகுள் பிளே ஸ்டோர் அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோரில் இருந்து பதிவிறக்கம் செய்து உங்கள் வீடியோக்களை பதிவேற்றலாம். உங்கள் வாழ்வைமாற்றிய, 'கோட்' என நீங்கள் மதிக்கும் ஆசிரியர்கள் குறித்த உங்களது பதிவுகளை ஆங்கிலத்தில் 'ஹேஷ்டாக் கோட்' என்பதை சேர்த்து வருகிற 8ந்தேதி இரவு 11 மணிக்குள் மின்மினி செயலியில் ஒரு நிமிட வீடியோவாக பகிர்ந்து கொள்ளலாம். மின்மினி சார்பில் ஐந்து வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆச்சர்யமூட்டும் பரிசுகள் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

மின்மினி செயலி கடந்த ஜனவரி மாதம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது, அப்போது முதல் மிகுந்த வரவேற்பை பெற்று கடந்த 8 மாதத்தில் 4.5 லட்சம் டவுன்லோட்களை பெற்றுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் தமிழ் மக்கள் மின்மினியில் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# காலி மருத்துவப் பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்ப வேண்டும்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, செப். 7



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

உலகமே மிரண்ட, மனித சமுதாயமே அரண்ட, யாரும் கேட்டிராத கொரோனா என்ற கொடிய அரக்கனை எதிர்த்து தங்கள் உயிரையும்துச்சமெனநினைத்துப் போராடிய மருத்துவர்களையும், செவிலியர்களையும்நடுரோட்டில்விட்டது மற்றும் மக்கள் நலன் காக்கும் மருத்துவத் துறையை பாழாக்கியதுதான் இந்த விடியா தி.மு.க.வின் 40 மாத கால சாதனை.

இந்த நிர்வாகத் திறனற்ற விடியா தி.மு.க. ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் உள்ளன. மக்கள் என்னும் சிங்கங்கள் அமைதியாக, பொறுமையாக இருப்பது இயலாமையால் அல்ல. சிங்கங்கள் பாயும் நாள் வரும், நாட்டாமை செய்யும் நரிகள் ஓட்டம் பிடிக்கும் என்று எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தேதியில் சுமார் 2,600 உதவி அறுவை சிகிச்சை நிபுணர் பணியிடங்கள் காலியாக உள்ளது என்றும், செவிலியர்கள், ஆய்வக உதவியாளர்கள் என்று ஆயிரக்கணக்கான மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும் செய்திகள் தெரியவருகிறது. மேலும், பல அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வர் பதவியை நியமிக்க இயலவில்லை எனில் மருத்துவக் கல்லூரிகளை திறப்பது ஏன் ? என்று ஒரு வழக்கு விசாரணையின்போது உயர்நீதிமன்ற மதுரை கிளை ஏற்கெனவேஅரசிடம்கேள்வி எழுப்பியுள்ளது. எனவே, உடனடியாக விடியா தி.மு.க. அரசு தமிழகத்தில் காலியாகஉள்ளஅனைத்து மருத்துவப் பணியிடங்களையும் போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார்.

# தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதை நிறுத்த வேண்டும்: அன்புமணி ராமதாஸ்

சென்னை, செப். 7



பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சென்னையை அடுத்த அத்திப்பட்டு கிராமத்தில் கடந்த மார்ச் மாதம் தொடங்கி வைக்கப்பட்ட வடசென்னை அதி உய்ய அனல் மின்நிலையம்3, அதன்பின் 6 மாதங்களாகியும் இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை. மக்களை வைத் தேர்தலுக்கு முன் அவசர, அவசரமாக திறக்கப்பட்ட அனல் மின்நிலையத்தில் நிலக்கரியை பயன்படுத்துவதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கூட செய்யப்படாததுதான் வடசென்னை அதி உய்ய அனல் மின்நிலையம்3 திறக்கப்பட்டும் நீண்ட நாளாகியும் முடங்கிக் கிடப்பதற்கு காரணம் ஆகும்.

ஓர்அனல்மின்நிலையம் செயல்படுவதற்கான அடிப்படை தேவை அதற்கான எரிபொருள். நிலக்கரியை எரிபொருளாக பயன்படுத்துவதன் மூலம் தான் குறைந்த செலவில் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும். அதைக் கருத்தில் கொண்டுதான் அதி உய்ய நிலை வெப்ப தொழில் நுட்பத்துடன் இந்த அனல் மின் நிலையம் உருவாக்கப்பட்டது. பிற அனல் மின்நிலையங்களைஒப்பிடும்போது இது 6% வரை அதிக திறன்மிக்கது; அதனால் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய 0.45 கிலோ நிலக்கரி மட்டுமே தேவைப்படுவதால் ஒரு யூனிட்டுக்கான உற்பத்திச் செலவு ரூ. 6 ஆக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால், வடசென்னை அனல்மின் நிலையம் 3 தொடங்கப்பட்டு 6 மாதங்கள்நிறைவடைந்து விட்ட நிலையில், நிலக்கரியை கையாள்வதற்கான தளம், நிலக்கரியை மின் நிலையத்திற்கு கொண்டு வருவதற்கான கன்வேயர் பெல்ட், எரிக்கப்பட்ட நிலக்கரியின் சாம்பல் வெளியில் பரவாமல்தடுப்பதற்கானசேமிப்புக்குளம் கட்டப்படவில்லை. அதனால், நிலக்கரியை பயன்படுத்துவதற்கு பதிலாக திரவ எரிபொருளை பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. அதனால், ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய ரூ.13 செலவாகிறது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் பத்தாண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட மின்னுற்பத்தி நிலையங்களில் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய சராசரியாக ரூ.3, 4 மட்டுமே செலவாகிறது. ஆனால், வடசென்னை அனல்மின்நிலையத்தின் திட்ட மதிப்பீடு இருமடங்கிற்கும் மேலாகி விட்டதால், அதில் ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு ரூ.6க்கும் கூடுதலாக செலவாகிறது. இவ்வாறாக மின்னுற்பத்தி நிலையங்களின்கட்டுமானத்தை திட்டமிட்டு தாமதப்படுத்துதல், அதிக விலை கொடுத்து வெளிச்சந்தையில் மின்சாரம் வாங்குதல் ஆகியவற்றால்தான் மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்குகிறது.

மின் வாரியத்தின் மொத்த இழப்பு ரூ.2 லட்சம் கோடியை நெருங்கும் நிலையிலும் தமிழக அரசும், மின்சார வாரியமும் மாறாமல், அதே அலட்சியத்துடனும், ஊழலுக்கு இடம் கொடுக்கும் வகையிலும் செயல்பட்டால் மின்சார வாரியம் இப்போதைக்கு லாபம் ஈட்ட முடியாது. மின்சாரக் கட்டண உயர்வு என்ற பெயரில் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மீது தான் சுமைகள் சுமத்தப்படும்.

எனவே, தமிழக அரசும், மின்சார வாரியமும் நிலுவையில் உள்ள மின்திட்டங்களை இனியாவது இலக்கு வைத்து நிறைவேற்ற வேண்டும்; தனியாரிடமிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதை நிறுத்த வேண்டும். அதன் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்தை லாபத்தில் இயக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 3 இடங்களில் புதிய சுங்கச்சாவடிகள்

சென்னை, செப். 7

தமிழகத்தில் மேலும் 3 இடங்களில் சுங்கச்சாவடிகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமைக்க உள்ளது. விழுப்புரம் மாவட்டம் நங்கிளி கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம் கரியமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் நாகம்பட்டி ஆகிய 3 இடங்களில் சுங்கச்சாவடி அமைக்கப்பட உள்ளது. கரியமங்கலம் சுங்கச்சாவடியில் ஒரு முறை சென்று வர ரூ.55 முதல் ரூ.370 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் திரும்பி வர ரூ.85 முதல் ரூ.555 வரை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நங்கிளி கொண்டான், நாகம்பட்டி சுங்கச்சாவடியில் ஒரு முறைசென்றுவருவதற்கான கட்டணம் ரூ.60 முதல் ரூ.400 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் திரும்பி வருவதற்கான கட்டணம் ரூ.95 முதல் ரூ.600 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# விஜய் படத்தின் தலைப்பில் சனாதனம்? வி.சி.க., எம்.பி ரவிக்குமார் கேள்வி



சென்னை, செப். 7

நடிகர் விஜய் நடித்துள்ள 'தி கோட்' திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. விஜய், தனது அரசியல் அறிவிப்பை அதிகாரப்பூர்வமாக அறிவித்த பிறகு வெளிவந்திருக்கும் முதல் படம் இது என்பதால் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை இந்த படம் கொடுத்துள்ளது. படம் சிறப்பாக உள்ளதாகவிஜய் ரசிகர்கள் கொண்டாடி வருகிறார்கள். தி கோட் படம் குறித்த சில விமர்சனங்களும் எழுந்துள்ளன.

இந்த நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் எம்.பி.யான ரவிக்குமார், விஜய் படத்தின் தலைப்பில் சனாதனம் கருத்து உள்ளதாக கூறியுள்ளார். இது தொடர்பாக ரவிக்குமார் எம்.பி கூறியிருப்பதாவது: விஜய் படத்தின் தலைப்பில் 'சனாதனம்'? The Greatest of all time என்பது ஒரு சனாதனக் கருத்தில்லையா? 'காலமெல்லாம் பெரியது இது தான்' என்றால் காலம் மாறினாலும் இது மாறாது என்றுதானே அர்த்தம்! 'என்றும் மாறாதது' என்பதுதானே 'சனாதனம்' என்ற சொல்லின் பொருள்! இதைத் தெரிந்துதான் விஜய் படத்துக்குத் தலைப்பு வைத்தார்களா?எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்.சொல். 157)" என்று பதிவிட்டுள்ளார்.

## மாரி செல்வராஜின் கலை மென்மேலும் சிறக்கட்டும் 'வாழை' படத்துக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு



மாரி செல்வராஜ் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான திரைப்படம் 'வாழை'. இந்த படத்தில் நிகிலா விமல், திவ்யா துரைசாமி, 'வெயில்' படம் மூலம் பிரபலமான பிரியங்கா மற்றும் சில சிறுவர்கள் நடித்திருந்தனர். இந்த படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். தன்னுடைய வாழ்க்கையில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக வைத்து 'வாழை' படத்தை மாரி செல்வராஜ் இயக்கியுள்ளார்.

இந்த படத்திற்கு திரைப் பிரபலங்கள் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் இயக்குனர் மாரி செல்வராஜை நேரில் சந்தித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "படம் பார்த்த அனைவரையும் பசித்த சிவனணைந்தானாக்கியது வாழை!

'திரைப்படத்தின் வெற்றி' என்ற இலக்கைத் தாண்டி சமூகத்தில் 'வாழை' ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகளை சுட்டிக்காட்டி அதன் இயக்குனர் மாரி செல்வராஜ் சாரை இன்று நேரில் வாழ்த்தினோம். விளிம்பு நிலை மற்றும் ஒடுக்கப்பட்டமக்களின்வாழ்க்கையையும்அவர்களின்வலிகளையும்அனுபவங்களின்வாயிலாகத்திரைமொழியில் பேசுகின்ற மாரி சாரின் கலை மென்மேலும் சிறக்கட்டும்!" என்று தெரிவித்துள்ளார்.

## 'தி கோட்' படக்குழுவுக்கு வாழ்த்து தெரிவித்த லோகேஷ் கனகராஜ், அட்லீ




இயக்குனர்வெங்கட்பிரபுஇயக்கத்தில்நடிகர்விஜய், 'திகிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (தி கோட்) படத்தில் நடித்துள்ளார். விஜய்யுடன், பிரசாந்த், பிரபுதேவா, யோகிபாபு, சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி உள்பட பலர் நடித்துள்ளனர்.

ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். டிஏஜிங் தொழில்நுட்பம் மூலம் விஜய் இளம் வயதில் தோன்றும் காட்சிகள் இருப்பதால் இப்படத்தின் மீது பெரியளவில் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ரசிகர்கள் ஆர்வத்துடன் டிக்கெட் முன்பதிவு செய்துவருகின்றனர்.

நடிகர் விஜய் கட்சி தொடங்கிய பின்னர் அவரது நடிப்பில் வெளியாகும் முதல் திரைப்படம் இதுவாகும். தி கோட் நாளை திரையரங்குகளில்வெளியாகஉள்ளநிலையில்படத்தின்கடைசிஅப்டேட்டைபடக்குழுசமீபத்தில்வெளியிட்டது. மேலும், இப்படத்திற்கு நாளை ஒருநாள் மட்டும் சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில், தி கோட் படக்குழுவுக்கு இயக்குனர்கள் லோகேஷ் கனகராஜ் மற்றும் அட்லீ ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## SK ஃபேன்ஸ்க்கு டிரீட் வைத்த அமரன் படக்குழு




இயக்குனர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து முடித்துள்ள திரைப்படம் அமரன். உலக நாயகன் கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக சாய் பல்லவி நடித்துள்ளார். ஜி.வி.பிரகாஷ்குமார் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்த திரைப்படத்தில்"முகுந்தன்" என்கின்ற கதாபாத்திரத்தில் நடிகர் சிவகார்த்திகேயன், ஒரு ராணுவ வீரராக நடித்திருக்கிறார். ஜம்மு காஷ்மீரில் உள்ள இந்திய ராணுவ தளத்தின் உயர் அதிகாரியாக அவர் இந்த திரைப்படத்தில் நடித்திருக்கிறார்.

மறைந்த இந்திய ராணுவ வீரரான முகுந்தன் வரதராஜன் வாழ்க்கையை மையமாக வைத்து இந்த படம் எடுக்கப்பட்டுள்ளது.

அமரன் திரைப்படம் தீபாவளிப் பண்டிகையை ஒட்டி அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இன்று வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான கோட் திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று தமிழ்நாடு முழுவதும் ஹவுஸ் ஃபுல்லாக ஓடிக்கொண்டு இருக்கிறது.

கோட் திரையிடப்படும் திரையரங்குகளில் இன்று முதல் அமரன் படத்தின் டீசர் ஒளிப்பரப்படும் என படக்குழு அறிவித்துள்ளனர். இதுக்குறித்து புதிய போஸ்டர் ஒன்றையும் படக்குழு வெளியிட்டுள்ளனர்.

## பாலியல் சீண்டல்கள் எல்லா துறைகளிலும் நடக்கிறது.. சினிமா மீது மட்டும் ஏன் பழி போடுறீங்க? நடிகை குஷ்பு



பாலியல் புகார்களை விசாரித்து உண்மை இருக்கும் பட்சத்தில், குற்றம் புரிந்தவர்கள் 5 ஆண்டுகள் திரைத்துறையில் பணியாற்ற தடை விதிக்க தயாரிப்பாளர் சங்கத்திற்கு பரிந்துரை செய்யப்படும் என்று தென்னிந்திய நடிகர் சங்க பெண் உறுப்பினர்கள் பாதுகாப்பு கமிட்டி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "விசாகா சுமிட்டி பரிந்துரையின் அடிப்படையில் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பெண் உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் பாலியல் புகார்களை விசாரிப்பதற்காக கடந்த 22.4.2019 அன்று SIAA GSICC கமிட்டி சங்கத்தின் சார்பில் உருவாக்கப்பட்டது. இந்த கமிட்டியின் ஆலோசனைக் கூட்டம் தி.நகர். நாம் பவுண்டேஷன் அரங்கில் இன்று (04.09.2024) காலை 11:30 மணியளவில் நடைபெற்றது. தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர், துணைத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், பொருளாளர் கார்த்தி மற்றும் கமிட்டி தலைவர் ரோகிணி தலைமையில் உறுப்பினர்களான சுஹாசினி, குஷ்பூ, லலிதா குமாரி, கோவை சரளா மற்றும் சமூக செயற்பாட்டாளர் ராஜி கோபி ஆகியோர் முன்னிலையில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் கமிட்டியில் ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது" தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டத்திற்குப்பின்செய்தியாளர்களிடம்பேசியநடிகைகுஷ்பு, "பொதுக்கூட்டத்தில் நடிகர் சங்கத்தின் தீர்மானங்கள் வெளியிடப்படும். எல்லா துறைகளிலும் பாலியல் துன்புறுத்தல் உள்ளது, ஏன் சினிமாவை மட்டும் சொல்கிறார்கள். எல்லா துறைகளிலும் கமிட்டி தேவைப்படுகிறது என்று தான் சொல்லுவேன். நடிகர் சங்கத்தில் இதுவரை யாரும் புகார் அளிக்கவில்லை. நான் பாலியல் சீண்டலுக்கு ஆளாகவில்லை" என்று அவர் கூறினார்.

## நானியின் Bloody Entry ஹிட் 3






தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகர்களுள் ஒருவர் நானி. நானி நடிப்பில் சூர்யாஸ் சாட்டர்டே படம் சிலநாட்களுக்கு முன்வெளியாகி மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது பல கோடிகளை வசூலில் குவித்துள்ளது.. இப்படத்தை விவேக் ஆத்ரேயா இயக்கியுள்ளார். படத்தில் பிரியங்கா மோகன் மற்றும் எஸ்.ஜே சூர்யா முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை தொடர்ந்து நானி அடுத்து இரண்டு படங்களில் கமிட் ஆகியுள்ளார். கோர்ட் என்ற படத்திலும் மற்றும் நானியின் 32 படத்தில் ஒப்பந்தம் ஆகியுள்ளார். படத்தின்தலைப்புதற்பொழுது வெளியாகியுள்ளது. படத்திற்கு ஹிட் 3 என பெயரிட்டுள்ளனர். படத்தின் டைட்டில் ப்ரோமோ தற்பொழுது வெளியாகியுள்ளது. ப்ரோம்மோவில் மிகவும் ஸ்டைலாக வாயில் சுருட்டுடன் ஜீப்பை ஓட்டுகிறார். எதொ ஒரு கிரிமினலை கொலை செய்துவிட்டு ரத்தகறையுடன் வண்டியை ஓட்டிச் செல்லும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இத்திரைப்படம் மே 1 2025 ஆம் ஆண்டு வெளியாகவுள்ளது. இப்படத்தை சைலேஷ் கொலானு இயக்கவுள்ளார். படத்தை வால் போஸ்டர் சினிமா தயாரிக்கவுள்ளது. இப்படத்தை குறித்த எதிர்பார்ப்புகள் ரசிகர்கள் மத்தியில் இப்பொழுதே உருவாக ஆரம்பித்துள்ளது. படத்தில் நடிக்கவுள்ள நடிகர்கள் மற்றும் பிற தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

## ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற கனவு ஒவ்வொரு வீரருக்கும் இருக்கும் தரம்பிர்




பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் உலகம் முழுவதில் இருந்து 4,400 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

பாரா ஒலிம்பிக் போட்டிகள் கடந்த ஆகஸ்ட் 28 ஆம் தேதி துவங்கிய நிலையில், செப்டம்பர் 8 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

இதில் இந்தியா இதுவரை 25 பதக்கங்களை வென்றிருந்தது. இதில் 5 தங்கம், 9 வெள்ளி மற்றும் 11 வெண்கல பதக்கங்கள் அடங்கும்.

பாரீஸ் ஆண்கள் கிளப் த்ரோ எஃப் 51 இல் பாரா ஒலிம்பிக்கில் தரம்பிர் தங்கம் வென்றார்.

அவர் கூறுகையில்: "நான் மிகவும் பெருமைப்படுகிறேன். ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற கனவு ஒவ்வொரு வீரருக்கும் இருக்கும். இன்று ஆசிரியர் தினம், அமித் சரோஹா இல்லாவிட்டால், நாங்கள் இங்கு இருந்திருக்க மாட்டோம், இந்தியாவிலும் இந்த விளையாட்டு இருந்திருக்காது என்பது உண்மைதான்..."

## பாரா ஒலிம்பிக்ஸ்: இந்தியாவுக்கு 25 ஆவது பதக்கம் ஜூடோவில் வெண்கலம் வென்றார் கபில் பர்மார்



பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. பாரா ஒலிம்பிக் போட்டிகள் கடந்த ஆகஸ்ட் 28 ஆம் தேதி துவங்கிய நிலையில், செப்டம்பர் 8 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

இதில் இந்தியா இதுவரை 24 பதக்கங்களை வென்றிருந்தது. இதில் 5 தங்கம், 9 வெள்ளி மற்றும் 10 வெண்கல பதக்கங்கள் அடங்கும். தற்போது ஜூடோவில் இந்திய வீரர் கபில் பர்மார் வெண்கலம் வென்றதை அடுத்து இந்தியா தனது 25 ஆவது பதக்கத்தை பெற்றது.

ஆண்கள் பாரா ஜூடோ விளையாட்டின் 60 கிலோ எடை பிரிவில் பிரேசில் நாட்டின் எலிடன் டி ஒலிவெய்ராவை எதிர்த்து விளையாடிய கபில் பர்மார் வெற்றி பெற்று வெண்கல பதக்கத்தை பெற்றுள்ளார்.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடர்: ஜோஸ் பட்லர் விலகல்



ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி வரும் 11ம் தேதி தொடங்குகிறது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடருக்கு இங்கிலாந்து அணி கேப்டனாக விக்கெட் கீப்பரும், அதிரடி வீரருமான பிலிப் சால்ட் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து டி20 அணி கேப்டனான ஜோஸ் பட்லர் வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்த தொடரில் இருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக ஆல் ரவுண்டர் ஜேமி ஓவர்டன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## துலிப் கோப்பையில் முஷீர் கான் சதம்: முதல் நாள் முடிவில் இந்தியா பி அணி 202/7



துலிப் கோப்பை தொடர் இன்று தொடங்கியது. இந்திய அணியில் உள்ள கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஸ்வின் தவிர மற்ற அனைத்து நட்சத்திர வீரர்களும் கலந்து கொண்ட டெஸ்ட் தொடர் போன்றே விளையாடி வருகின்றனர்.

செப்டம்பர் 19ம் தேதி வங்கதேசத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மோதுவதால் துலிப் கோப்பைத் தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இந்தியா ஏ மற்றும் இந்தியா பி அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தொடங்கியது. ஏ அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும், பி அணியின் கேப்டனாக அபிமன்யு ஈஸ்வரனும் மோதினர். டாஸ் வென்ற ஏ அணி பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி, பி அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெய்ஸ்வால், அபிமன்யு களமிறங்கினர். அபிமன்யு 13 ரன், ஜெய்ஸ்வால் 30 ரன், சர்ப்ராஸ் கான் 9 ரன், ரிஷப் பண்ட் 7 ரன், சாய் கிஷோர் ஒரு ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர். நிதிஷ் ரெட்டி, வாஷிங்டன் சுந்தர் டக் அவுட்டாகினர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் பொறுப்புடன் ஆடிய முஷீர் கான் சதம் விளாசி அசத்தினார். 8வது விக்கெட்டுக்கு முஷீர் கான், நவ்தீப் சைனி ஜோடி 108 ரன்கள் சேர்த்துள்ளது.

முதல் நாள் முடிவில் இந்தியா பி 79 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 202 ரன்கள் எடுத்துள்ளது. முஷீர் கான் 105 ரன்னும், நவ்தீப் சைனி 29 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இந்தியா ஏ அணி சார்பில் ஆவேஷ் கான், கலீல் அகமது, ஆகாஷ் தீப் ஆகியோர் தலா 2 விக்கெட் எடுத்தனர்.

## பாரா ஒலிம்பிக்: வில்வித்தையில் இந்திய ஜோடி ஏமாற்றம்




பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

இதுவரை இந்தியா 5 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலம் என மொத்தம் 25 பதக்கங்களைக் கைப்பற்றி உள்ளது.

இந்நிலையில், பாரா வில்வித்தை கலப்பு ரிகர்வ் பிரிவில் இந்தியாவின் ஹர்விந்தர் சிங்பூஜா ஜோடி ஸ்லோவேனியா ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் இந்திய ஜோடி அதிர்ச்சி தோல்வி அடைந்தது. இதன்மூலம் இந்திய அணி வெண்கலம் வெல்லும் வாய்ப்பை இழந்தது.

## பாரா ஒலிம்பிக்: ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் சிம்ரன் இறுதிப்போட்டிக்கு தகுதி




பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பாரா ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தியா சார்பில் 32 பெண்கள் உள்பட 84 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

இதுவரை இந்தியா 5 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களைக் கைப்பற்றி உள்ளது.

இந்நிலையில், பெண்கள் 100 மீட்டர் டி12 அரையிறுதி ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் சிம்ரன் 2வது இடம்பிடித்தார். இதன்மூலம் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.